<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 121/2021 நாள்: 02.12.2025 வா.சா.1– அருணா

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -</u>

தாவா சொத்து எங்களுக்கு உரிமைபட்டது என்று விளம்புகை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து பத்ரகாளிபுதூர், குடிமங்கலம் கிராமத்தை சேர்ந்ததாகும். தாவா சொத்து எங்கள் பரம்பரை சொத்து. பரம்பரை சொத்து என்பதை காட்டுவதற்கான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண்.25/1 ஏ. அதனுடைய பரப்பளவு 1.96 ஏக்கராகும். தாவா சொத்து தற்போது எங்களுடைய சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து தரிசு பூமியாக உள்ளது. அது மானாவாரி பூமியாகும். தாவா சொத்தை எங்களுடைய அனுமதியில்லாமல் வருவாய் துறையினர் அளந்துள்ளனர், அதனால் அவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று விளம்புகை செய்வதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை சுற்றி இருக்கும் பூமிகள் விவசாய பூமிகள். தாவா சொத்தில் வீடு, கிணறு, கோவில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் நாங்கள் குடியில்லை என்றால் சரியல்ல, நாங்கள் குடியிள்ளோம், நாங்கள் விற்பனை செய்துள்ளவர்கள் அதில் வீடு கட்டி வசிக்கிறார்கள், வேலை செய்பவர்களும் வசிக்கிறார்கள். தாவா சொத்தில் ஓட்டு வீடு உள்ளது. தாவா சொத்தில் நாங்கள் கிரையம் செய்து கொடுத்த கண்ணகி, தமிழரசி, பெரியப்பன் ஆகியோர்கள் வீடு கட்டி வசிக்கிறார்கள். தாவா சொத்து சம்பந்தப்பட்ட சிட்டா, அடங்கல் ஆகியவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி

கண்ணகி, தமிழரசி, பெரியப்பன் ஆகியோர்களுக்கு விற்பனை செய்ததற்கான ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை எதற்காக வருவாய் துறையினர் அளந்தார்கள் என்று, ஆட்சேபனை தெரிவித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனு கொடுத்தேன். வட்டாட்சியரிடம் எங்களுடைய ஆட்சேபனை மனுவை கொடுத்தோம், அதற்கான பதில் தற்போதுவரை வரவில்லை. மாவட்ட ஆட்சியருக்கோ, வேறு மேல் அதிகாரிகளுக்கோ ஆட்சேபனை தெரிவித்து மனு எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்து நத்தம் அடிப்படையில் பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், தாவா தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.12.02 16:24:15 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.